# இலக்கியத்தில் மேலாண்மை

- வெ.இறையன்பு இ.ஆ.ப

**முன்னுரை** :

இலக்கியம் நம் இதயத்தில் புதைந்து, எப்போது வேண்டுமானாலும் கிளர்ந்து விடுகிற விதை. இலக்கியங்களில் மேலாண் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் சொல்லப்பட்ட மேலாண் கருத்துகளையும் நிர்வாக நெறிகளையும் நாம் உணரலாம். நாட்டின் முன்னேற்றம் மேலாண் சிந்தனையில் தொடங்கியது. மேலாண்மைத் துறையில் தமிழர் பழங்காலந்தொட்டே சிறந்து விளங்குகின்றனர் .

**நேர மேலாண்மை** :

செயல் செய்வதற்கு ஏற்ற காலத்தையும் ஏற்ற இடத்தையும் அறிந்து செயல்பட்டால் உலகத்தையே அடைய நினைத்தாலும் கைகூடும் என்பதை.

**“ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**

**கருதி இடத்தால் செயின்** ” என்ற குறள் தெளிவுபடுத்துகிறது.

மடியின்மை என்னும் அதிகாரத்தின் வாயிலாக ஓர் அரசன் ஒரு நாளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

**“மடிஇலா மன்னவன் அய்தும் அடிஅளந்தான்**

**தாஅயது எல்லாம் ஒருங்கு**”

என்ற குறளில் உலகம் அனைத்தையும் அளந்த இறைவன் சோம்பல் இன்றி பாதுகாப்பது போல அரசனும் சோம்பல் இல்லாமல் தன் பெரு முயற்சியால் மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்கிறார்.

**சீனக்கதை வாயிலாக நேர மேலாண்மையை விளக்குதல்**:

சீனத்தில் யாங்செள என்ற பகுதி. பல இளைஞர்கள் நீச்சல் வீரர்கள். நீச்சல் தன்னம்பிக்கை தருவதோடு எதிர்நீச்சல் போடவும் கற்றுத் தருகிறது. ஒரு நாள் படகில் ஆழமான நதியில் பல இளைஞர்கள் பயணம் செய்கிறார்கள். வெள்ளம் ஏற்பட்டுப் படகு கவிழ்ந்தது. அனைவரும் நதியில் விழுந்து நீச்சல் அடிக்க ஆரம்பித்தனர். ஒருவன் மட்டும் சரியாக நீந்தாமல் தத்தளித்தான். அவன் மற்ற வீரர்களைவிட சிறந்த வீரனும் கூட.

எல்லோரும் ஏன் பின் தங்குகிறாய்? என்று கேட்கிறார்கள். நீ சிறந்த வீரனே என்கிறார். அவன் என்னுடைய கச்சையில் ஆயிரம் பொற்காசுகள் உள்ளது. அதனால் என்னால் நீந்த முடியவில்லை என்றான். அவன் அவற்றை விடுவதற்கு மனமில்லாமல் தன் அரிய உயிரை நீத்தான். எது எந்த நேரத்தில் முக்கியம் என்று சரியான முடிவெடுப்பதில் தான் வாழ்வின் வெற்றி அடங்கி உள்ளது என்பது இக்கதை மூலம் அறிய முடிகிறது.

**வேளாண் மேலாண்மை** :

மனமே ஒரு வேளாண்மைக்குட்பட்ட மேலாண்மை ஆகும்.

**இன்சொல்விளைநிலனாஈதலேவித்தாக**

**வன்சொல் களைக்கட்டுவாய்மைஎருவட்டி**

**அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்**

**பைங்கூழ் சிறுகாலைச் செய்**

என்ற பாடலடிகளில் விளை நிலமாக இன்சொல்லும், விதையாக ஈதலும், வன்மையான சொல் களையாகவும் உண்மை என்ற எருவை விட்டு அன்பு நீர் பாய்ச்சி வேளாண்மை செய்ய வேண்டும் அறநெறிச்சாரம் விளக்குகிறது.

**வணிக மேலாண்மை :**

- யாருடனும் போட்டி போடக்கூடாது.
- போட்டிக்கு வருபவரை அழிக்க வேண்டும் என்று எண்ணக் கூடாது.
- போட்டியாளர்கள் நமக்குள் உந்து சக்தியை உற்பத்திச் செய்கிறார்கள்

காவிரிப்பூம்பட்டினத்தில் மாரி காலத்து மழை மேகம் போல், கடல் வழியே வேற்று நாட்டு மரக்கலங்கள் வந்தன. மரக்கலங்களில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்தும், வேறு நாடுகளுக்கு ஏற்றுமதியாக அனுப்பவும் கணக்கிட இயலாத பொருட்கள் பண்டகசாலை முற்றத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

"**வான் முகந்த நீர் மலைப் பொழியவும்**

**மலைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்**" – என்ற பாடலடிகள் மூலம் அறிய முடிகிறது.

**பதிற்றுப்பத்து காட்டும் வணிக மேலாண்மை விளக்கம்:**

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் யவனரை அரண்மனைத் தொழிலாளர்களாக வைத்திருந்தான். பகை நாட்டுச் செல்வங்களைத் தன் நாட்டு மக்களுக்கு வழங்கினான் என்று பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தின் மூலம் அறிய முடிகிறது.

**நிர்வாக மேலாண்மை :**

உயர் பதவிகளில் இருப்பவர்கள் எல்லாவற்றிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பதில்லை. யார் திறமைசாலிகள் என்று அறிந்து அவர்களை அருகில் வைத்துக் கொண்டால் போதும். தெரிந்திருப்பது ஒரு வகை அறிவு என்றால் யாருக்குத் தெரியும் எனத் தெரிந்திருப்பது மற்றோர் அறிவு. நிருவாகத்தில் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும். வரவைத் தாண்டி நிறையச் செலவு செய்பவன். அடுத்தவரிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்படுவான்

**நாலடியார் கூறும் நிர்வாக மேலாண்மை:**

**கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்.**
**நல்லறிவு நாளுந் தலைப்படுவர்-தொல்சிறப்பின்**
**ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்ந்தலாற் புத்தோடு**
**தண்ணீர்கமுத் தான்பயந் தாங்கு**

**ஷேக்ஸ்பியரின் நாடகம் வழி நிதி மேலாண்மை:**

டைமன் என்பவன் ஏதென்ஸ் நகரில் இருந்தான். வரவு குறைவு செலவு அதிகம் நீடித்தது. உதவியாளர் எவ்வளவு சொல்லியும் கேட்க மறுத்தான். கடன் கொடுத்தவர்கள் கழுத்தை நெரித்தார்கள். அதற்கும் அவன் வருந்தவில்லை . தன்னிடம் விருந்து உண்டவர்கள் உதவுவார்கள் என்று எண்ணினான். அதுவும் பொய்யானது. சேவகர்கள் நான்கு திசை சென்றும் வெறும் கையோடு திரும்பினர். டைமன் ஊருக்கு ஒதுக்குப்புறமாகச் செல்கிறான். மனித இனத்தையே வெறுக்கிறான்.

இதையே ஔவையார்

**ஆன முதலில் அதிகம் செலவானால்**

**மானம் அழிந்து மதிகெட்டுப் – போன திசை**

**எல்லார்க்கும் கள்ளனாய் ஏழி பிறப்புக்கும் தீயனாய்**

**நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.**

வரவுக்கு அதிகம் செலவு செய்து, மானம் அழிந்து மதிக்கெட்டு, எந்தத் திசை போனோம் என்று தெரியாமல் திருடனாய், தீயவனாய் வாழும் நிலை ஏற்படும் என்று ஷேக்ஸ்பியர் நாடகத்தோடு ஒப்பிடுகிறார்.

**மேலான மேலாண்மை** :

- ✓ மேலாண்மை என்பது வெறும் புத்தக அறிவுடன் முடிவதன்று.
- ✓ நொடிக்கு நொடி சூழல்கள் மாறிக் கொண்டே இருப்பது.
- ✓ ஏற்கனவே தயாரித்த அறிவுரைகளை வைத்து புதிய நெருக்கடியை நேர்கொள்ள முடியாது.
- ✓ முன் அனுபவம் என்பது எதிர்மறை ஆகிவிட்டது.
- ✓ அனுபவசாலிகள் செக்குமாடாகத்தான் இருப்பார்கள்.

எவ்வளவு எழுதுகிறோம் என்பது முக்கியமல்ல எவ்வளவு அடர்த்தியுடன் எழுதுகிறோம் என்பதே முக்கியம் என்ற வரிகள் மூலம் உலகப்புகழ் பெற்றவர் ஹிராக்ளிடஸ். அவர் கிரேக்க நாட்டவர். இரண்டுமுறை ஒருவன் ஒரே நதியில் இறங்க முடியாது என்று அவர் சொன்ன கோட்பாடு வாழ்வுக்கும் பொருந்தும் வர்த்தகத்திற்கும் பொருந்தும். போன ஆண்டு பொருள் பற்றாக்குறை ஏற்பட்டபோது சமாளித்த விதத்தையே இந்த முறை அனுசரிக்க முடியாது. ஏனென்றால் இப்போது ஓடும் நதியின் வெள்ளம் வேறு நேற்று ஓடிய வெள்ளம் இந்நேரம் கடலில் கலந்து இருக்கும். ஒவ்வொரு நாளும் புதிது என்று குறிப்பிடுகிறார். ஒற்றை வாக்கியத்தில் ஓராயிரம் பொருள் ஒவ்வொரு நாளும் ஒரு புதுச் சூழல்நிலவுகிறது. நேற்று நம் வாடிக்கையாளராக இருந்தவன் இன்று அவ்வாறு தொடர வாய்ப்புகள் குறைவு. தொழில் நுட்பங்கள் நாளுக்கு நாள் விருத்தி அடைந்து கொண்டே செல்கிறது.